# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : வரலாறு

பகுதி : **இந்தியா - மதச்சார்பற்ற நாடு**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இந்தியா – மதச்சார்பற்ற நாடு

தனிநபர் அல்லது ஒரு அரசு எந்த ஒரு மதத்தையும் சாராமல் நடுநிலைமை வகிப்பது மதச்சார்பின்மை எனப்படுகிறது.

அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார பண்புகளை எந்த மதத்தினிற்றும் பெறாமல் தனித்து செயல்படுத்துவதே மதச்சார்ப்பின்மையின் முக்கிய கூற்றாகும்.

மதத்தின் பெயரால் எந்த தரப்பு மக்களையும் ஒதுக்காமல் அனைவரையும் சமமாக பாவித்தல்.

## இந்திய வரலாற்றில் மதச்சார்பின்மை

இந்திய வரலாற்றின் வேரிலிருந்து நுனிவரை மதச்சார்பின்மை பல்வேறு கால கட்டங்களில் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. பழைய கால இந்திய புராணமான "சனாதன தர்மாவில்" வெவ்வேறான எண்ணங்களில் இருந்து பலதரப்பட்ட ஆன்மீக சித்தாந்தங்கள் தோன்றி இருந்தாலும், அவை அனைத்தும் ஒரே நோக்கத்தையே கொண்டிருந்தன. நான்கு வேதங்களின் வளர்ச்சியும், உபநிடதங்களும் இந்து மதத்தின் பன்முகத் தன்மையையே பெரிதும் பிரதிபலித்தன.

அசோகரது ஆட்சி காலத்திலேயே அதாவது 2300 ஆண்டுகளுக்கு முன்னரே அனைத்து மதமும் சமமானவையே என்ற உயரிய கொள்கையை பின்பற்றிய பேரராக மௌரிய பேரரசு விளங்கியுள்ளது. அசோகரது 12வது கல்வெட்டு அனைத்து மதமும் போற்றுதலுக்கு உரியவையே என்ற கருத்துகள் கொண்டதாக உள்ளது.

பின்னர் ஜெயினம், புத்தம், இஸ்லாம், கிறித்துவம் என்ற பலதரப்பட்ட மதங்கள் கோலோச்சிய காலகட்டங்கள் இருப்பினும் இந்த மண் எல்லா மதத்தவரையம் அரவணைத்தே சென்றுள்ளது.

மத்திய இந்திய வரலாற்று காலங்களில் சூபி, ஆன்மிக பக்தி இயக்கங்கள் இந்தியாவில் மிகுதியான அன்பையும் அமைதியையும் விதைத்தன.

இந்த இயக்கங்களின் தலைவர்களாக குவாஜாமொய்னுதின் சிஷ்டி, பாபா பரித், கபீர்தாஸ், குருநானக், துக்கராம், மீராபாய் போன்றோர் பல இடங்களில் பல காலகட்டங்களில் சிறந்து விளங்கினார்.

மத்திய இந்திய வரலாற்று காலத்திலேயே அக்பர், மொகாலய பேரரசர் மதச்சார்பற்ற தலைவராகவும், இந்துக்களுக்கு வரி விதிக்கும் முறையான ஜெஸ்ஸியா முறையையும் ரத்து செய்தார். அதற்கு சாட்சியாய் தின்-இலாஹி என்ற அனைத்து மத ஒற்றுமைக்கான கருத்தாக சான்று நிருபிக்கிறது.

அக்பர் உருவாக்கிய “இபாதத்கானா” அனைத்து மதத்தவரும் வழிபடும் வழிபாட்டு மன்றமாக சிறப்புற்றிருந்தது.

அக்பருக்கு முன்னேரே பாபர் தன்னுடைய மகன் ஹிமாயுனிடம் இந்தியாவின் கோவில்களையும், பசுக்களையும், காக்கவும் நீதி அமைப்பை சரிவர உறுதிப்படுத்தவும கூறிய அறிவுரைகளுக்கு சான்றுகள் உள்ளன.

இதுபோன்ற மதச்சார்பற்ற சிந்தனைகள் சுதந்திரப் போராட்டத்தின் போதும் இந்திய மக்களால் உறுதியாக பின்பற்றப்பட்டது எனினும ஆங்கிலேயர்கள மிகத்தீவிரமாக பிரித்தாளும் சூழ்ச்சியை கையாண்டனர்.

**முக்கியத்துவம் வாய்ந்த பிரிவினை நிகழ்வுகள்**

1. 1905 வங்க தேச பிரிப்பு, 1909ம் ஆண்டு வழங்கிய முஸ்லீம்களுக்கான தனி வாக்குரிமை, பின்னர் சீக்கியர்கள் கிறிஸ்துவர்களுக்கும் விரிவு செய்யப்பட்டு, 1919-ல் விரவுபடுத்தப்பட்டது.
2. 1932-ல் ராம்சே மெக்டொனால்ட் வழங்கிய ஜாதிவாரி பிரிப்பு மிக முக்கியமானதாகும், சிறுபான்மையினர் என்ற பிரிவினைகளையும் அவர்களுக்கு இடஒதுக்கீடுகளையும் ஏற்படுத்தி சமூகத்தின் பல படிநிலைகளிலும் ஆங்கில அரசு இந்திய மக்களை, மதம், இனம், ஜாதி வாரியாக பிரிக்கும் பணியை மேற்கொண்டது.

இந்திய சுதந்திர போராட்டமும் மதச்சார்பற்ற முறையிலேயே சிறப்புடன் தொடங்கியது. ஆரம்பகால சுதந்திரத்திற்கு குரல்கொடுத்த தலைவர்களான, பெரோஷ்ஷா மேத்தா, கோவிந் ரானடே, கோபால கிருஷ்ணகோகலே அனைவரும் மதச்சார்பற்ற தலைவர்களாகவே இருந்தனர்.

1928-ல் மோதிலால்நேரு அவர்களால் வடிவமைக்கப்பட்ட அரசியலமைப்பின் மதச்சார்பற்ற என்ற சிந்தனையுடனே உருவாக்கப்பட்டு இருந்தது. தேசப்பிதா காந்தியும், இந்தியாவில் உள்ள அனைத்து மதத்தை சேர்ந்தவர்களும் சகோதர சகோதரிகளே எனும் கோட்பாட்டை தன் வாழ்வின் இறுதிவரை பின்பற்றினார்.

ஜவஹர்லால் நேருவின் சிந்தனைகளும் இந்தியாவின் வரலாற்றின் மைல்கல்லாகவே அமைந்தது. இவ்வாறாக வரலாற்று காலம் முதலே இந்தியா எந்த மதத்தையும் முழுதுமாக சாராமல் அனைத்து மதத்தவர்களான நாடாகவே விளங்கி வருகிறது.

## இந்திய மதச்சார்பின்மை தத்துவங்கள்

இந்திய வேதங்களின் கூற்றுப்படி “தர்மா நிரபெக்ஷதா” அரசாங்கத்திற்கு மத வேறுபாடுகள் இல்லை என்னும் கூற்று 2500 ஆண்டுகளுக்கு முன்பே இந்த மண்ணில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மேற்கத்திய முறையை தழுவி நம்முடைய தற்போதை மதச்சார்பற்ற முறை வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு அரசானது எந்த மதத்தையும் சாராமல் இருந்து அனைவருக்குமான சமமான நிதியை வழங்குதல் என்று கூறப்படுகிறது.

இந்திய மதச்சார்பின்மை தத்துவங்கள் சர்வ தர்ம சமபவா எனும் கூற்றுடன் பெரிதும் பொருந்திப் போகின்றன.

நவீன கால மதச்சார்பின்மையின் சிற்பிகளான விவேகானந்தரையும் மகாத்மா காந்தியையும் குறிப்பிடலாம். அவர்களின் வழியே இந்தியாவும் எந்த அலுவல் மத்தையும் பின்பற்றாமல் மக்கள் அவர்களின் திருமணம், விவாகரத்து, வம்சாவழி தொடர்புகளை தத்தமது மத விருப்பத்தின் பேரில் அமைத்துக்கொள்ள வழிவகை செய்கிறது.

இந்திய அரசியலமைப்பில் மதச்சார்பின்மை

இந்திய அரசியலமைப்பின் பல பிரிவுகள் மற்றும் விதிகள் இந்த அரசு எவ்வாறு மதச்சார்பு அற்றதாக அமைந்துள்ளது என விவரிக்கிறது.

1974ம் ஆண்டில் அரசியலமைப்பின் முகப்பு பக்கத்தில் 42-வது அரசியல் அமைப்பு சட்டத் திருத்தத்தின் மூலம் இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு என்று பிரகடனப்படுத்தப்பட்டது.

**அரசியலமைப்பு அனைவரையும் சமமாக பாவிக்கும சில சரத்துகளும் அதன் விளக்கங்ளும்**

| | |
|---|---|
| விதி 14 | சட்டத்தின் முன் அனைவரும் சமம். |
| விதி 15 | மதம், பிறப்பு, சாதி, பாலினம், பிறந்த இடத்தின் பேரில் இந்தியர் யாரும் தாழ்த்தவர் உயர்ந்தவர் அல்லர். |
| விதி 16 | அரசாங்க பணிகளை பெறுவதிலும், மதத்திலும், பிறப்பாலும், சாதி, பாலினம், பிறந்த இடம், வம்சாவழி ஆகிய எந்த தகுதியின் அடிப்படையிலும் ஏற்ற தாழ்வுகள் பின்பற்றப்படாது. |
| விதி 25 | விரும்ப மதத்தை பின்பற்றவும், விளம்பரம் செய்யவும் அனைத்து குடிமக்களுக்கு சம உரிமை |
| விதி 26 | மதத்தின் பெயரிலான நிறுவனங்களோ, தொண்டு அமைப்புகளோ தொடங்கி நிர்வகித்து கொள்ளும் உரிமை |
| விதி 27 | எந்த மதத்தையும் பரப்பவோ, அதன் நிகழ்வுகளுக்கோ இந்த அரசு எந்த வித வரியும் விதிக்காது. |
| விதி 28 | மத குழுக்கள் கல்வி நிறுவனங்கள் நிர்வகிக்கும் உரிமை. |
| விதி 29 & 30 | சிறுபான்மையினர் அனைவருக்கும் சமமான கல்வி மற்றும் கலாச்சார உரிமைகளை பாதுகாத்துக் கொள்ளும் உரிமை. |

| | |
|---|---|
| விதி 51 A | இந்தியர் அனைவரும் ஒன்றினைந்து பலதரப்பட்ட கலாச்சார மதிப்புகளையும், பெருமையையும் கொண்ட இந்த சமுதாயத்தை காப்பது நமது அனைவரது சமம ான கடமை என கூறப்பட்டு உள்ளது. |

## இனங்கள், மொழி, மதம் மற்றும் பேச்சுவழக்கு

**இனங்கள்** (Races)

இனம் என்பது ஏறக்குறைய நிரந்தரமான தனித்துவமான தன்மைக் கொண்ட மக்கள் குழு ஆகும். ஒரு நபரின் தோலின் நிறம் மற்றும் முடியின் நிறம் ஆகியவற்றைக் கொண்டு இனங்களை விவரணம் செய்யலாம். மூதாதையரிடமிருந்து பெறப்பட்ட உடல்ரீதியான அம்சங்கள் மற்றும் பண்புகளின் அடிப்படையில் இனக் குழுக்களாக மனிதர்களை வகைப்படுத்த வேண்டும் என்பது இதன் நோக்கம் மற்றும் அறிவியல் வகைப்பாடாகும்.தோலின் நிறம், உயரம், தலையின் வடிவம், முகம், மூக்கு, கண், முடியின் வகை மற்றும் இரத்தத்தின் வகை போன்ற முக்கிய அம்சங்களின் அடிப்படையில் இனங்கள் கண்டறிந்து வகைப்படுத்தப்படுகின்றன. மனித இனங்கள் நான்கு பெரிய குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன: அவை 1. நீக்ராய்டு 2. மங்கோலாய்டு 3. காகசாய்டு மற்றும் 4. ஆஸ்ட்ரலாய்டு.

**I. நீக்ராய்டு**

இவர்கள் பொதுவாக "கருப்பு இனத்தவர்" என்று அழைக்கப்படுகிறார்கள். பிற இனத்தவர்களை காட்டிலும் அதிக கருப்பு நிறத் தோலினை கொண்டுள்ளனர். சாய்ந்த நெற்றி, தடித்த உதடுகள், பரந்த மூக்கு மற்றும் கருத்த முடி போன்றவை இவர்களின் மற்ற பொதுவான பண்புகள் ஆகும். இவர்கள் ஆப்பிரிக்காவின் துணை சஹாரா பகுதிகளில் வசிக்கின்றனர்.

**2. மங்கோலாய்டு**

மடிந்த கண் இமைகள், பாதாம் வடிவ கண்கள், மஞ்சள் நிறத்தோள் மற்றும் v வடிவ கன்னங்களுடையவர்கள். பூர்வீக அமெரிக்கர்கள் மற்றும் எஸ்கிமோ இன மக்களும் மங்கோலாய்டுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். மற்ற இனங்களுடன் ஒப்பிடும் போது இவர்கள் மிகக் குறைந்த உடல் முடி, குறைந்த உடல் நாற்றத்தையும் மற்றும் சிறிய மூட்டு விகிதத்தையும் கொண்டுள்ளனர். மிதமான குளிர்க் காற்றுக்கு ஏற்றவாறு இவர்களின் முக அமைப்பு அமைந்துள்ளது. இவர்கள் கிழக்கு ஆசியாவில் வசிக்கின்றனர்.

**3. காகசாய்டு**

கூரான மூக்கு, செங்குத்தான நெற்றி, இளஞ்சிவப்பு/ஆரஞ்சு நிறத்தோல், புலப்படக்கூடிய புருவ முகடு மற்றும் வண்மயமான கண்கள்/முடியைக் கொண்ட "வெள்ளையர்கள்" என அழைக்கப்படுகின்றனர். ஐரோப்பாவின் காலநிலை காரணமாக அதிக சூரிய ஒளியை பெறுவதற்கு

ஏற்றவாறு அவர்களின் தோல்நிறம் அமைந்துள்ளது என்றும் மூக்கின் ஈரப்பதம் காற்றில் உலராமல் இருப்பதற்காக அவர்களின் மூக்கு அமைப்பு அமைந்துள்ளதாகவும் சிலர் நம்புகின்றனர். இவர்கள் ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கின்றனர்.

**4. ஆஸ்ட்ரலாய்டு**

இவர்கள் புலப்படக்கூடிய புருவமுகடு, பரந்த மூக்கு, சுருள் முடி, கருப்பு நிறத் தோல், மற்றும் குறைவான உயரம் போன்ற அமைப்புடையவர்கள் ஆவர். இவர்களது தடித்த உதடு விரைப்பான உணவை சாப்பிட உதவுகிறது. இவர்கள் ஆஸ்திரேலியா மற்றும் பாபுவா நியூ கினியாவில் வசிக்கின்றனர்.

## இனக்குழு (Ethnicity)

இனக்குழு என்பது வாழ்வின் வழிமுறையை குறிக்கும் ஒரு பகிர்ந்தளிக்கப்பட்ட கலாச்சாரம் ஆகும். இது மொழி, மதம் மற்றும் ஆடை, உணவு போன்ற பொருள்சார் கலாச்சாரம் மற்றும் இசை, கலை போன்ற கலாச்சார பொருட்களில் பிரதிபலிக்கிறது. இனக்குழு பெரும்பாலும் சமூக ஒற்றுமை மற்றும் சமூக மோதல்களின் முக்கிய ஆதாரமாக உள்ளது. உலகம் ஹான் சைனிஸிலிருந்து (உலகின் மிகப் பெரிய இனகுழு) மிகச்சிறிய உள்நாட்டு இனக்குழு வரையிலான வேறுபட்ட ஆயிரக்கணக்கான இனக்குழுக்களின் வீடாக அமைந்துள்ளது. இவற்றில் சில இனக்குழுக்கள் சில பன்னிறு மக்களை மட்டுமே கொண்டுள்ளது. இந்த குழுக்களுக்கென கிட்டத்தட்ட ஒரு பொதுவான வரலாறு, மொழி, மதம், கலாச்சாரம் போன்ற பொது அடையாளத்துடன் கூடிய குழு உறுப்பினர்களை கொண்டுள்ளது.

இந்தியா இனம், மதம், மொழி, கலாச்சாரம், உணவு மற்றும் மனித சமுதாயத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் உயர்ந்த பன்முகத்தன்மைக் கொண்ட தனித்துவம் வாய்ந்த நாடாகும். இந்திய நாகரிகம் உலகின் மிகப்பழமையான ஒன்றாகும். இது சிந்து சமவெளி நாகரீகத்தின் வட இந்தியாவில் இந்தோ-ஆரியர்கள் பொது-ஆ 1800-ல் விவசாயத்திற்காக இந்தியாவிற்குள் இடம் பெயர்ந்தனர். இந்தியா பல்வேறு பண்பாட்டு மக்கள்தொகை கொண்ட நாடாகும்.

## மதம் (Religion)

மதம் ஒரு தெளிவற்ற பயமல்ல அல்லது அறியப்படாத சக்திகள் மற்றும் பயங்கரவாதத்தின் குழந்தை அல்ல. ஆனால் ஒரு சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களின் நலனைக் கொண்ட சட்டம் மற்றும் தார்மீக ஒழுங்கை பாதுகாப்பது ஆகும். சமுதாயத்தின் முன்னேற்றத்தை பாதிக்கும் வாழ்க்கைக்கு மதம் ஒரு தனித்துவமான அணுகுமுறையை வழங்குகிறது. உண்மையில் பெரும்பாலான கலாச்சார சூழ்நிலைகளில் மதம் சமூக-பொருளாதார மற்றும் அரசியல்-கலாச்சார காரணிகளுக்கு இடையே பரஸ்பர தொடர்பை காட்டுகின்றன.

**மதங்களின் வகைகள்**

- கடவுள் நம்பிக்கை அடிப்படையில் மதம் வகைப்படுத்தப்படுகிறது.
- ஒரே கடவுள் கோட்பாடு: ஒரு கடவுளை வழிபடுபவர்கள் ஒரே கடவுள் கோட்பாட்டை பின்பற்றுபவர்கள் ஆவர். (இஸ்லாம், கிறிஸ்தவம்).

- பல கடவுள் கோட்பாடு : பல கடவுள்களை வழிபடுபவர்கள் பல கடவுள் கோட்பாட்டை பின்பற்றுபவர்கள் ஆவர் (இந்து மதம்).

மதம் தோன்றிய பகுதிகளின் அடிப்படையில் மற்றொரு வகைப்பாடு உள்ளது. அவை: கிழக்கிந்திய மதம், மேற்கத்திய மதம், தூர கிழக்கத்திய மதம், ஆப்பிரிக்க மதம், இந்திய மதம் மற்றும் பல. புவியியலாளர்கள் பொதுவாக மதத்தை பின்வருமாறு வகைப்படுத்துகிறார்கள்.

- உலகளாவிய மதங்கள்-கிறிஸ்துவம், இஸ்லாம், புத்தமதம்.
- இன மதங்கள்-இந்துமதம், ஷின்டோயிசம் (ஜப்பான்), சீன நம்பிக்கை, யூதம்.
- பழங்குடி அல்லது பாரம்பரிய மதங்கள்-இயற்கையை வழிபடும் மதம், மாய நம்பிக்கை, மதச்சார்பற்ற (மதம் சாரா மற்றும் நாத்திகர்கள்).

**மொழி** (Language)

மொழி பல்வேறு கலாச்சாரங்களின் அடையாள குறியீடாக இருக்கிறது. ஏனென்றால் தகவல் தொடர்புக்கு மொழி இன்றியமையாததால் நாம் உருவாக்கும் அரசியல், சமூக மற்றும் பொருளாதாரம் போன்றவற்றை இது வலுவாக பாதிக்கிறது. இதன் விளைவாக, பொருளாதார மற்றும் மத அமைப்புகள் பெரும்பாலும் மொழிப் பரவல் மற்றும் அரசியல் எல்லைகளின் வடிவங்களை பின்பற்றுவதால் மொழி சார் எல்லைகளுக்கு இணையாக காணப்படுகின்றன. இந்த நவீனமுறை மொழிப் பரவல், வர்த்தகம், சுற்றுலா, ஊடகம் மற்றும் சர்வதேச அமைப்புகளால் எளிதாக்கப்பட்டுள்ளது. இது மொழியியல் பன்முகத்தன்மைக்கு உதவி இருக்கிறது. மிகப்பெரிய மொழியியல் பன்முகத்தன்மை பன்முக சமூகங்களுக்கு காரணமாக உள்ளது.

## இந்தியாவின் முக்கிய மொழிகள்

இந்தியா ஒரு வளமான மொழியியல் பாரம்பரியம் கொண்ட நாடாகும். இது பலவகைப்பட்ட மொழிகளையும், பேச்சு வழக்கு மொழியையும் கொண்ட இன மற்றும் சமூக குழுக்களைக் கொண்டுள்ளது. 1961-ம் ஆண்டு இந்தியாவின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்திய சமூகத்தின் பல்வேறு பிரிவுகளால் 187 மொழிகள் பேசப்படுகின்றன. நாட்டில் 97 சதவிகித மக்களால் 23 முக்கிய மொழிகள் பேசப்படுகின்றன. நாட்டில் 97 சதவிகித மக்களால் 23 முக்கிய மொழிகள் பேசப்படுகின்றன. ஆங்கிலம் தவிர்த்து பின்வரும் 22 மொழிகள் இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை : 1. காஷ்மீர், 2. பஞ்சாபி, 3. ஹிந்தி, 4. உருது, 5. பெங்காலி, 6. அஸ்ஸாமி, 7. குஜராத்தி, 8. மராத்தி, 9. கன்னடம், 10. தமிழ், 11. தெலுங்கு, 12. மலையாளம் 13. சிந்தி 14. சமஸ்கிருதம் 15. ஒரியா 16. நேபாளி 17. கொங்கனி மற்றும் 18. மணிப்பூரி, 19. போடோ, 20. டோக்ரி, 21. மைதிலி மற்றும் 22. சந்தாளி. இதில் ஆரம்பத்தில் 14 மொழிகள் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டன. பின்னர், 1967-ம் ஆண்டில் 21-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் மூலம் சிந்தி மொழி சேர்க்கப்பட்டது. 1992-ம் ஆண்டில் 71-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் மூலம் கொங்கனி, மணிப்பூரி மற்றும் நேபாளி ஆகியவை சேர்க்கப்பட்டது. 2003-ம்

ஆண்டில் 92-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் மூலம் போடோ, டோக்ரி, மைதிலி மற்றும் சாந்தளி ஆகியவை சேர்க்கப்பட்டன.

**இந்திய மொழிகளில் முக்கியமாக நான்கு மொழிக் குடும்பங்கள் அடங்கியுள்ளன**

1. ஆஸ்ட்ரிக் முண்டா, மோன்-கிமர்.
2. திராவிடம்: தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், கோண்டி, குருக், ஓரியன் மற்றும் பல.
3. சைனோ-திபெத்திய போடோ, கரின், மணப்பூரி, மற்றும் பல.
4. இந்தோ-ஆரிய: ஹிந்தி, உருது, சமஸ்கிருதம்.

**பேச்சு வழக்கு (Dialect)**

ஒரு பிரதேசத்தின் தனித்துவமான மொழி வடிவம் அல்லது சமூகக் குழு எதுவாக இருப்பினும், அதே மொழியின் பிற வடிவங்களின் பேச்சாளர்கள் புரிந்து கொள்ளும் வகையில் உள்ளதை பேச்சுவழக்கு என்கிறோம். இதில் இரு முக்கிய வகைகள் உள்ளன.

1. புவியியல் சார்ந்த பேச்சு வழக்கு-அதே பகுதியில் உள்ள மக்கள் அல்லது வட்டாரத்தினர் பேசுவது
2. சமூக பேச்சுவழக்கு-அதே சமூகம், கல்வி நிலை அல்லது தொழில்சார் குழுவினரால் பேசப்படுவது.

**இந்தியாவின் முக்கிய பேச்சு வழக்குகள்**

இந்தியாவில் 40-க்கும் மேற்பட்ட மொழிகள் அல்லது பேச்சு வழக்குகள் அழிந்து வரும் நிலையில் உள்ளதாக கருதப்படுகின்றது. மேலும் சில ஆயிரம் பேர் மட்டுமே பேசுகின்ற மொழிகள் அழிவை நோக்கி செல்வதாக அதிகாரிகள் கூறுகின்றனர். மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தின் அறிக்கையின்படி, 22 பட்டியலிடப்பட்ட மொழிகளும் மற்றும் 100 பட்டியலிடப்படாத மொழிகளும் இந்தியாவில் உள்ளன. அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளிலிருந்து 11 மொழிகளும், மணிப்பூரிலிருந்து 7 மொழிகளும் மற்றும் ஹிமாச்சல பிரதேசத்திலிருந்து 4 மொழிகளும் இடம் பெற்றுள்ளன. இந்தியாவில் 42 மொழிகள் 10,000 க்கும் குறைவான மக்களால் மட்டுமே பேசப்படுகின்றன. வேறு சில மொழிகளும் இந்தியாவில் ஆபத்தான நிலையில் உள்ளன.

**தமிழ் நாட்டின் முக்கிய பேச்சு வழக்குகள்**

வட்டார எல்லைக்குள் பேசும் பேச்சு வழக்குகளில் தமிழ் ஒரு சுவாரஸ்யமான மொழி ஆகும். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் மொழி பல கவர்ச்சிகரமான மேம்பாட்டைக் கொண்டுள்ளது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி போன்ற பழைய மற்றும் நன்கு அறியப்பட்ட பேச்சு வழக்குகளை தமிழ்நாட்டின் பலர் நன்கு அறிந்திருக்கிறார்கள். ஒரு குடியிருப்புக்கான தலத்தை முதலில் தேர்ந்தெடுப்பது என்பது அதன் அன்றாடத் தேவைகளான நீர் அளிப்பு, வேளாண் திறன் மிக்க நிலம், கட்டுமானப் பொருட்கள் மற்றும் எரிபொருட்கள் ஆகியவற்றைச் சார்ந்தது.குடியிருப்புகளை இரு

வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன, கிராமிய மற்றும் நகரக் குடியிருப்புகள் ஆகும். பொதுவாக கிராம மற்றும் நகர்ப்புறத்திற்கான வேறுபாடுகளை அறிவோம்.

1. கிராமத்திற்கும், நகரத்திற்குமிடையேயுள்ள மிகப்பெரிய வேறுபாடு அதன் செயல்பாடாகும். கிராமப்புறத்தில் முதன்மைத் தொழிலான விவசாயம் முக்கியமாக உள்ளது. நகர்ப்புறத்தில் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைத் தொழில்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் சேவை செய்யும் துறைகளும் காணப்படுகின்றன.
2. பொதுவாக நகர்ப்புறங்களைவிட கிராமப்புறங்களில் மக்களடர்த்தி குறைவாக உள்ளது.
3. நகர்ப்புறக் குடியிருப்புகளை வரையறை செய்பவை மேம்பட்ட குடியிருப்பு வசதிகள், கல்விக்கான வாய்ப்புகள், போக்குவரத்து வசதிகள், வரத்தக மற்றும் சமூகத் தொடர்புகள் மற்றும் ஒட்டு மொத்த தரமான வாழ்க்கைத் தரம் போன்றவை ஆகும். இந்த வசதிகள் அனைத்தும் கிராமப் பகுதிகளில் குறைவாகவே காணப்படுகின்றன.
4. நகர்ப்புறங்களைப் பாதிக்கக்கூடிய மாசடைதல் அல்லது போக்குவரத்துப் பிரச்சனைகள் கிராம புறங்களில் இல்லை.
5. கிராமப்புற சமூகங்களில் வேலை வாய்ப்பு சார்ந்த இடம்பெயர்வுக்கு மிகக் குறைந்த வாய்ப்பே உள்ளது. நகர்ப்புறத்தில் ஏராளமான பணிகள் உள்ளதால் பணி நிமித்தமான இடப்பெயர்வு அதிகமாக உள்ளது.
6. கிராமப்புற மக்கள் குறைந்த அளவே இடம்பெயர்ந்து செல்வதால் அவர்களுக்கிடையிலான சமூக உறவு நெருக்கமாக இருக்கும். நகர்ப்புறங்களில் வாழ்க்கை முறை சிக்கலாகவும், துரிதமாகவும் இருப்பதால் சமூக உறவுகள் சம்பிரதாயமாக (Formal) இருக்கும்.

## கலை, நடனம், நாடகம் மற்றும் இசை வளர்ச்சிக்கான இந்திய அமைப்புகள்

### சாகித்திய அகாடமி

1954 ஆம் ஆண்டு சாகித்திய அகாடமியை இந்திய அரசு ஏற்படுத்தியது. தேசிய நிறுவனமாக சாகித்திய அகாடமி சில முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை மேற்கொள்கிறது.

- இந்தியாவில் இலக்கிய கலாச்சாரத்தை மேம்படுத்தல்
- இந்திய மொழிகளின் இலக்கியத்தை வளர்த்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்
- தேசிய ஒற்றுமையை ஊக்குவித்தல்

தன்னாட்சி பெற்ற இந்த அமைப்பானது, இந்திய மொழிகளில் 24 மொழிகளின் வளர்ச்சிக்காக பணியாற்றுகிறது. (இதில் 22 அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ளவை) ஆங்கிலம் மற்றும் ராஜஸ்தானி மொழிகளின் சிறப்புகளையும் மேம்படுத்துகிறது.

சமீப காலங்களில் சாகித்திய அகாடமி வாய்மொழி இலக்கியங்களையும் பழங்குடி இலக்கியங்களையும் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகின்றனர்.

வரும் சந்ததியினருக்கு நமது மொழிகளின் இலக்கிய இலக்கண பகுதிகளை சிறப்புடன் அளிப்பதில் சாகித்திய அகாடமியின் முக்கியத்துவம் வாய்ந்தது.

**சங்கீத நாடக அகாடமி:**

தமிழில் இசை – நடனம் மற்றும் நாடகங்களுக்கான தேசிய மன்றம் எனப்படுகிறது.

இசை, நடன, நாடக கலைஞர்களின் முன்னேற்றம் மற்றும் இந்த கலைகளை பாதுகாக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட தன்னாட்சி அமைப்பாகும்.

1952-ம் ஆண்டு இந்திய அரசாங்கத்தால் கல்வி அமைச்சகத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டு, அதன் முதல் தலைவராக P.V. இராஜமன்னார் நியமிக்கப்பட்டார்.

இந்தியா முழுதும் பரவி உள்ள பலதரப்பட்ட இசை, நாடக, நடன கலைகளை அழிவிலிருந்து மீட்டு வளப்படுத்தல் மற்றும் பாதுகாத்தலே இந்த அமைப்பின் முக்கிய நோக்கமாகும்.

**முக்கிய நோக்கங்கள்:**

1. இசை, நாட்டியம், நாடகம் இவற்றில் வெளியாகக் கூடிய அரிய நூல்களுக்கு பண உதவி அளித்தல்.
2. நாடோடி கூத்துகளையும், பாடல்களையும் பாதுகாக்க திட்டம் ஒன்றை இக்கழகம் தொகுத்துள்ளது.
3. இசைக்கருவி பொருட்காட்சியையும், ஒலி / ஒளிப்பதிவு அறையும் அமைத்து பராமரித்து வருகிறது.
4. இசை நாட்டியம், நாடகம் இவற்றில் அபூர்வ திறமை கொண்டவர்களையும் தனி திறமை கொண்ட கலைஞர்களையும் அரங்கேற்றம் செய்கிறது.
5. சங்கீத நாடக் என்ற அரையாண்டு இதழ் ஒன்றையும் மாதாந்திர செய்திகள் கொண்ட இதழையும் வெளியிடுகிறது.

**லலித் கலா அகாடமி**

தேசிய கலைக்கழகம் எனப்படும் லலித் கலா அகாடமி இந்திய அரசால் 1954-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தன்னாட்சி அமைப்பாகும்.

மத்திய கலாச்சார அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படும் இந்த அகாடமியின் தலைமையிடம் புதுதில்லியில் அமைந்துள்ளது.

இந்திய கலை கலாச்சாரம், பண்பாடு ஓவியம் போன்ற நுண்கலைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காக பலதரப்பட்ட கலைஞர்களின் கலை வெளிப்பாடுகளை உலகறிய செய்ய தனித்துவமான மேடையை அமைத்து கொடுத்து ஊக்கப்படுத்துகிறது.

இந்த அகாடமியின் மண்டல அலுவலகங்கள் சென்னை கொல்கத்தா, லக்னோ, சிம்லா, ஷில்லாங், புவனேஷ்வர் போன்ற நகரங்களில் அமைந்துள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச அளவில் கலை, கண்காட்சிகளை நடத்தி திறமையானவர்களை உலகறியச் செய்யும் அமைப்பாக செயல்படுகிறது.

கலைகள் குறித்த ஆய்வகங்களையும், பலதரப்பட்ட கலை சேகரிப்புகளை உள்ளடங்கிய கலை நூலகத்தையும் லலித் கலா அகாடமி நிர்வகித்து வருகிறது.

புதிய முயற்சிகள் மேற்கொள்பவர்களை கண்டறிந்து நிதிஉதவி மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதில் முக்கிய பங்காற்றுகிறது.

## வினாக்கள்

1. இந்திய – ஒரு மதச்சார்பற்ற நாடு பற்றி சிறுகட்டுரை வரைக.
2. இந்தியாவிலுள்ள இனம், நிறம், மொழி போன்றவற்றில் உள்ள பாரம்பரியத்தை விளக்கி எழுதுக.
3. கலை, நடனம், இசை ஆகியவற்றின் அமைப்புகள் பற்றி சிறுகுறிப்பு வரைக.